**IN THE COURT OF SUB COURT, USILAMPATTI**

**O.S. No.219 / 2024**

**Dated: 30.06.2026**

Name : முத்துக்குமரன் (PW1)

<u>பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :</u>

எனது உடன்பிறந்த அண்ணன் பெயர் வெற்றிவேல் . எனது அப்பா பெயர் பன்னீர் செல்வம் . அம்மா பெயர் ஒச்சம்மாள் . எனது அண்ணன் வெற்றிவேல் அவர்கள் இதே நீதிமன்றத்தில் OS No.220/2024 வழக்கை இந்த பிரதிவாதிகளின் மகள் மற்றும் மருமகன் மீது தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான் . அதுவும் புரோநோட்டு வழக்கு தான் என்றால் சரிதான் . பிரதிவாதிகளின் மகள் பெயர் தெரியாது மருமகன் பெயர் சாம்சன் . சாம்சன் மற்றும் பிரதிவாதிகளின் மகள் மற்றும் எனது தாயார் ஒச்சம்மாள் இடையில் வழக்கு ஏதேனும் உள்ளதா என்றால் இல்லை . அவர்களுக்கு இடையில் கொடுக்கல் வாங்கல் ஏதேனும் உள்ளதா என்றால் இருந்திருக்கலாம் என்றால் தெரியாது . எனக்கு படிக்க தெரியும் நான் Ex.Army Man வாதுரை மற்றும் பிரமாண வாக்குமூலத்தில் படித்து பார்த்து தான் கையெழுத்து செய்தேன். பிரமாண வாக்குமூலம் மற்றும் வாதுரையில் ஒரே நாளில் பணம் கேட்டதாகவும் அதே நாளில் கொடுத்தாகவும் உள்ளது என்றால் 2, 3 நாட்களுக்கு முன்னர் கேட்டார். மேற்படி விவரத்தை வாதுரை மற்றும் நிரூபண வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான் . குறுக்கு விசாரணையில் சொல்லும் தகவல் நிருபணவாக்குமூலம் மற்றும் வாதுரைக்கும் முன்னுக்கு பின் முறனாக உள்ளது என்றால் சரியில்லை. நான் வருமான வரி முன்னர் செலுத்தி வந்தேன் தற்போது

இல்லை. அது சம்மந்தமாக ஆவணம் எதுவும் இல்லை . கொடுக்கல் வாங்கல் செய்வதற்கு உரிமம் உள்ளது தற்போது அதை புதுப்பிக்கவில்லை . நான் பிரதிவாதிகளுக்கு பணம் கொடுத்தாக சொல்லும் சமயத்தில் உரிமம் புதுப்பிக்கப்படாமல் இருந்தது . ஏற்கனேவே இருந்தாக சொல்லும் உரிமத்தையும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான் . சட்டபிரிவு 269SS வருமான வரி சட்டத்தின்படி ரூ.20 ஆயிரத்துக்கு மேல் ரொக்கமாக கொடுக்க கூடாது என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. ரூ.2 லட்சம் என் வங்கிக் கணக்கில் இருந்து எடுத்தாக ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை , வருமான வரி கணக்கில் காட்டியதற்கு ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான் . இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு தாவா பணம் கேட்டு சட்ட அறிவிப்பு அனுப்பினார்களா என்றால் இல்லை. புரோநோட்டு எனக்கு கொடுக்கப்பட்டது இல்லை என்றாலும் வேறு நபருக்கு கொடுத்த புரோநோட்டை பயன்படுத்தி பொய்யாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் எனவே தான் சட்ட அறிவிப்பு அனுப்பவில்லை என்றாலும் சரியில்லை. பிரதிவாதிகள் கடந்த 05.10.2024 உத்தப்பநாயக்கனூர் காவல் நிலையத்தில் என் மீதும் என் குடும்பத்தார் மீதும் புகார் அளித்தார் என்றால் தெரியாது . SP அலுவலகத்தில் தான் கொடுத்தார்கள் நாங்கள் தான் முதலில் உத்தப்பநாயக்கனூர் காவல் நிலையத்தில் புகார் அளித்தோம் . நானும் என் குடும்பத்தாரும் கந்து வட்டி கொடுத்து அதை கேட்டு கொலை மிரட்டல் செய்து அடித்தாக SP அலுவலகத்தில் புகார் அளித்தார் என்றால் சரிதான் . அதில் நான் ஆஜர் ஆனேன் என்றால் சரிதான் . ஆனால் அது பொய்யான புகார். அந்த புகாருக்கு பிறகு தான் இந்த வழக்கு தாக்கல்

செய்யப்பட்டது என்றால் சரிதான் . 11.11.2024 ம் தேதி இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான் . நிரூபணவாக்குமூலத்தில் புரோநோட்டு சாட்சிகளின் பெயரை குறிப்பிடவில்லை என்றால் சரிதான். ரூபாய் நோட்டுகள் எந்த வகையானவை என்று குறிப்பிடவில்லை என்றால் சரிதான் . இந்த வழக்கின் பிரதிவாதிகளின் மருமகன் வங்கி கணக்கில் இருந்து என் தாயார் ஒச்சாம்மாள் வங்கி கணக்கிற்கு பணம் செலுத்தப்பட்ட விவரம் தெரியாது. என் தாயார் வங்கி கணக்கிற்கு பிரதிவாதிகளின் மகள் உமா மகேஸ்வரி மற்றும் மருமகன் வங்கி கணக்கில் இருந்து ரூ.4,75,000/- செலுத்தப்பட்டுள்ளது என்றால் தெரியாது . வா.சா.ஆ.1 புரோநோட்டு யார் எழுதினார்கள் என்றால் பிரதிவாதிகள் தான் எழுதினார்கள் பாண்டி என்பவர் தான் எழுதினார். புரோநோட்டில் உள்ள விவரங்கள் மற்றும் மாற்றி கையெழுத்து வெவ்வேறு பேனா மற்றும் மையினால் எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். பாண்டி என்பவருக்கு எழுத படிக்க தெரியாது என்றால் எனக்கு அது பற்றி தெரியாது . புரோநோட்டு சாட்சிகள் வெற்று புரோநோட்டில் கையெழுத்து செய்தார்கள் என்றால் சரியில்லை. புரோநோட்டு சாட்சிகள் கையெழுத்து செய்த வா .சா.ஆ.1 புரோநோட்டு எனக்கு கொடுக்கப்படவில்லை என்றாலும் என் குடும்பத்தாருக்கு கொடுக்கப்பட்டது என்றாலும் சரியல்ல. என் பிராதில் எந்த இடத்தில் பணம் திரும்ப கேட்கப்பட்டது என்ற விவரம் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். திரும்ப கேட்டபோது வேறு எந்த சாட்சிகள் இருந்தார்களா என்ற விவரத்தை சொல்லவில்லை என்றால் சரிதான் . 1 ம் பிரதிவாதி தனது மருமகன் சாம்சன் எழுதிக்கொடுத்த ஈடுகடன் பத்திரம் பற்றி எனக்கு தெரியாது. அந்த பத்திரத்தில் என் அப்பா பன்னீர் செல்வம் சாட்சி

கைனயெழுத்து செய்துள்ளார் என்றால் தெரியாது . என் தகப்பனார் வட்டி தொழில் செய்கிறார் என்றால் என் அம்மா பெயரில் உரிமம் வாங்கி செய்கிறார் . உரிமம் ஒச்சம்மாள் பெயரில் இருப்பதால் பிரதிவாதியின் மருமகன் ஒச்சம்மாளிடம் பணம் செலுத்தினார் அதைப் பற்றி எனக்கு தெரியாது . SP அலுவலகத்தில் என் மீதும் என் அப்பா மற்றும் அம்மா மீது புகார் அளிக்கப்பட்டது ஆனால் அது பொய்யான புகார் . 24.10.2024 அன்று 1 ம் பிரதிவாதி புகார் அளித்தார் என்றால் சரிதான் .ன என்னிடம் காட்டப்படும் புகார் தான் அந்த புகார் என்றால் சரிதான் . சாட்சி ஒப்புக்கொண்டதன் பேரில் அது பி.வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. தமிழ்நாடு Money lenders Act ல் உள்ள விதிகளை பின்பற்றாமல் பணம் கொடுத்தேன் என்றால் சரியில்லை . Money lenders Act படி பணம் கொடுக்க முறையான உரிமம் வேண்டும் வருமான வரி செலுத்தியிருக்க வேண்டும் என்றாலும் நான் அவ்வாறு விதிகளை பின்பற்றவில்லை என்றால் சரியில்லை . நான்ன 100 க்கு 1 வீதம் வட்டிக்கு பணம் கொடுத்தேன். 1 ம் பிரதிவாதி என் தாயாருக்கு 8 சதவீதம் வட்டி போட்டு பணத்தை திரும்ப கொடுத்தார் என்றால் தெரியாது . என் மீதும் என் குடும்பத்தார் மீதும் கந்துவட்டி புகாரும் சேர்த்து கொடுக்கப்பட்டது என்றால் அது பொய்யான புகார் . என் தாயார் ஒச்சம்மாளிடம் தான் தாவா புரோநோட்டு கொடுக்கப்பட்டது என்றாலும் நான் அதை தவறாக பயன்படுத்தி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியில்லை. என் அண்ணன் தாக்கல் செய்துள்ள வழக்கில் உள்ள புரோநோட்டும் என் தாயார் பெயரில் கொடுக்கப்பட்டது என்றால் அதைப்பற்றி தெரியாது . பிரதிவாதிகள் SP, DSP அலுவகத்தில் புகார் அளித்து உசிலம்பட்டி நீதித்துறை நடுவர்

நீதிமன்றத்தில் என் மீதும் , என் பெற்றோர்கள் மீதும் வழக்கு நிலுவையில் உள்ளது என்றால் எனக்கு அதைப்பற்றி தெரியாது . என்னிடமும் ஒச்சம்மாளிடம் வாங்கிய பணத்திற்கு கூடுதலாக பணத்தை திரும்ப செலுத்திவிட்டார்கள் என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. என்னிடம் வாங்கிய பணத்தை கொடுக்கவில்லை. தாவா புரோநோட்டு முறையான நபரிடம் இல்லை என்றால் சொன்னால் சரியல்ல . புரோநோட்டுபடி பணம் பிரதிவாதிகளுக்கு கொடுக்கப்பட வில்லை என்றால் சரியில்லை. என் பிராது மற்றும் நிரூபணவாக்குமூலத்தில் வெறுமனையாக பிரதிவாதிகளிடம் இருந்து பணத்தை திரும்ப கேட்டதாக கூறுவது ஏற்க்கத்தக்கது இல்லை என்றால் சரியில்லை . எழுதத்து மூலமாக பணத்தை திரும்ப கேட்காமல் தாக்கல் செய்த இந்த வழக்கு நிலைக்கதக்கது இல்லை என்றால் சரியில்லை . பணம் எங்கிருந்து வந்தது சொல்லாததால் வழக்கு தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியில்லை.

Typed to my dictation in my presence and hearing and under my personal dictation and superintendence and interpreted to the Witness in the presence of the witness and admitted and signed by the witness to be correct.

L MAHESWARI Digitally signed by L MAHESWARI Date: 2026.06.30 18:00:44 +0530

Sub Judge,
Usilampatti